இன்றைய செய்தி நாளைய வரலாறு
# முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 20-02-2025

# இந்தி, இந்திய தேசத்தின் மொழியா?

**“உங்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வேன். இது மொழிப் பிரச்சினை அல்ல இது ஆதிக்கப் பிரச்சினையே தவிர மொழி பிரச்சினை அல்ல... நாம் எந்த அளவிற்குப் பணியத் தயாராக இருக்கிறோம் என்பதைக் கண்காணிப்பதற்காக அளவிடுவதற்காக, அரசியல் ஆதிக்கக்காரர்கள், அரசியல் சூழ்ச்சிக்காரர்கள், ஏகாதிபத்திய வெறி கொண்டவர்கள், தங்களுடைய மொழியைத் திணித்து ‘இதைத்தான் நீ ஆட்சி மொழியாகக் கொள்ளவேண்டும். இதிலே தான் பாடங்கள் நடக்கும். இதிலேதான் தேர்வுகள் நடக்கும். இதிலே தான் சட்டங்கள் இயற்றப்படும். இந்த மொழியில்தான் நாடாளுமன்றத்தில் பேசுவார்கள். இது தெரிந்தால் இங்கெல்லாம் வா இது தெரியாவிட்டால் நீலகிரித் தோதுவர்களைப் போல், குருவிக்காரர்களைப் போல், ஆப்பிரிக்க நாட்டு நீக்ரோக்களைப் போல், நீயும் உன்னுடைய நாட்டோடு, கூட்டோடு, இரண்டாந்தரக் குடிமகனாய், மட்டரகமான மனிதனாய், ஏனோ தானோவாய், எடுப்பார் கைப்பிள்ளையாய் அடங்கிக் கிட’ என்பதுதான் இதன் உட்பொருளாகும்”** என்று பேரறிஞர் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் இப்போது செய்து கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

‘நாம் எந்த அளவுக்கு அடிபணியத் தயாராக இருக்கிறோம்’ என்பதை அளவிடுவதற்காகத்தான் இந்தியைத் திணித்துத் திணித்துச் சோதனை செய்து வருகிறார்கள். இந்தித் திணிப்பை எதிர்த்து எதிர்த்து நாமும் நம் மொழிக் காப்புப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தியைத் திணிக்கும் போதெல்லாம் அதனை நாம் எதிர்க்கும் போதெல்லாம் இந்திக்கு ஆதரவாக வைக்கப்படும் வாதம் என்பது - ‘இந்தி தான் இந்திய நாட்டின் மொழி, இந்த தேசத்தின் மொழி, தேசிய மொழி’ என்று சொல்லப்படுகிறது. அப்படி எங்கு எதில் இருக்கிறது என்பதுதான் நம்முடைய கேள்வி ஆகும்.

இந்திய நாட்டுக்கு அலுவல் மொழி உண்டே தவிர, தேசிய மொழி என்பது கிடையாது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 343 ஆவது பிரிவின் படி இந்திய அளவில் இந்தி என்பது அலுவல் மொழியாகும். (official languages of the indian union). அது மட்டுமே தனித்த, ஒரே ஒரு அலுவல் மொழி அல்ல. இந்தியுடன், ஆங்கிலமும் கூடுதல் அலுவல் மொழியாகும்.

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமும் அந்த மாநிலத்துக்கான அலுவல் மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றுள்ளன. இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் இல்லாத மொழிகளைக் கூட மாநிலங்கள் தங்கள் அலுவல் மொழியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற அனுமதியையும் அரசியலமைப்புச் சட்டம் வழங்கி இருக்கிறது.

இந்தியை மட்டுமே அலுவல் மொழியாக ஆக்குவதற்கு எதிர்ப்பு இருந்ததால்தான் ஆங்கிலமும் அலுவல் மொழியாக ஆக்கப்பட்டது. இந்தியை தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், திராவிட இயக்கமும், தமிழறிஞர்களும் மட்டுமே எதிர்க்கவில்லை. இந்தி ஆட்சி மொழியாக ஆகிவிடாமல் தடுக்கவும், ஆங்கிலமும் அலுவல் மொழியாகவும் டி.டி.கிருஷ்ணமாச்சாரியாரும், என்.கோபாலசாமி ஐயங்காரும், என்.ஜி.ரங்காவும், எஸ்.வி.கிருஷ்ணமூர்த்தி ராவும் முயற்சித்தார்கள்.

**“இந்தியாவிலுள்ள ஒரு மொழியே இந்தியாவுக்குத் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று அரசியல் நிர்ணய அவை உறுப்பினர்கள் விரும்பினார்கள். இந்திதான் அதற்குத் தகுதி உடையது என்று அதனை தேசிய மொழி என்றார்கள். ஆனால் நடைமுறையில் இந்தி, தேசிய மொழியாக முடியவில்லை. தேசிய அளவில் பயன்படுத்தப்படும் மொழி ஆங்கிலம் மட்டும்தான். மற்ற தேசிய இனங்கள் இந்தியைத் திணிப்பதாக அச்சப்படுகின்றன. அவைகள் தங்கள் மொழி மீது பெருமிதம் கொண்டுள்ளன. எனவே, தேசிய குறிக்கோள் என்ன என்பதையும், அது நிறைவேற்றும் வரை மொழிப் பிரச்சினையில் எந்தளவிற்குச் சுமுகமான முறையில் செயல்பட வேண்டும் என்றும் அரசியல் சட்டம் தெளிவுபடுத்துகிறது”** என்று சொன்னார் காரன் வில்லி ஆஸ்டின்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 17 ஆவது பாகம் ஆட்சி மொழிகள் பற்றிச் சொல்கிறது. 343 ஆம் பிரிவில் இருந்து 351 ஆவது பிரிவு வரை இது தொடர்பான விதிகள் இருக்கின்றன. இந்திய துணைக் கண்டத்தில் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளின் மொத்த எண்ணிக்கை 1652. அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் 22 மொழிகள் மட்டுமே உள்ளன. இவை இந்தியக் குடியரசின் அட்டவணைப்படுத்தப்பட்ட மொழிகள் ஆகும். தமிழ் உள்ளிட்ட இந்த 22 மொழிகளில் இந்தியும் ஒன்று அவ்வளவுதான்.

இந்தியோடு அலுவல் மொழியாக ஆங்கிலமும் 1965 ஆம் ஆண்டு வரை நீடிக்கலாம் என்பதுதான் சட்டம் ஆகும். ஆனால் மொழிப்போர் காரணமாக 1965 ஆம் ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலமே தொடர்கிறது. 1965 ஆம் ஆண்டும் இந்திக்கு முழு அலுவல் மொழி மகுடம் சூட்டப்படவில்லை. இந்திய நாடாளுமன்றத்தில் 1963 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழிகள் சட்டத்தின்படி ஆங்கிலமும் அலுவல் மொழியாகவே தொடர்கிறது.

ஆங்கிலத்தை நீக்கும் முயற்சியை அப்போது தமிழ்நாடு மட்டுமல்ல, ஆந்திராவும், கர்நாடகமும், கேரளமும், மேற்கு வங்கமும் எதிர்த்தது. இந்தியை மட்டுமே அலுவல் மொழியாக ஏற்காத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் நீடிக்கும் என்று 1967 ஆம் ஆண்டு சட்டமே கொண்டு வந்திருக்கிறார்கள். இதனை 1976 ஆம் ஆண்டைய திருத்தமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

**எனவே இந்தி என்பது தேசிய மொழி அல்ல, இந்த தேசத்தின் மொழியும் அல்ல. ஆட்சி மொழியும் அல்ல. அது அலுவல் மொழி மட்டும்தான். அலுவல் மொழியையும் பொறுத்தவரையில் இந்தி மட்டுமல்ல, ஆங்கிலமும் அலுவல் மொழிதான். இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் பல்வேறு மொழிகளை தங்களது அலுவல் மொழிகளாக தேர்ந்தெடுத்துள்ளன. எனவே இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்குமான அலுவல் மொழியாகவும் அதனைச் சொல்ல முடியாது. இதனைப் புரிந்து கொண்டு இந்தியைப் பற்றிப் பேச வேண்டும். பன்முக இந்தியாவை மனதில் வைத்துப் பேச வேண்டும்.**

••




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.2.2025) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்ட மீனவர் சங்க நிர்வாகிகள், இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு சங்க நிர்வாகிகள் என்.தேவதாஸ், பாய்வா, ஏ.பி.முருகன், தங்கச்சிமடம் அனைத்து விசைப்படகு நாட்டுப்படகு மீனவர் சங்கத்தின் தலைவர் வி.பி.சேசுராஜா, பொருளாளர் ஆர்.சகாயம், இணைச் செயலாளர் பி.ஆல்வின், பாம்பன் நாட்டுப்படகு மீனவர் நல உரிமைச் சங்கத்தின் தலைவர் எஸ்.பி.ராயப்பன், நிர்வாகி ஆரோக்கிய தீபக், மண்டபம் அனைத்து விசைப்படகு சங்க நிர்வாகிகள் ஜாகீர் உசேன், வாசீம் ஆகியோர் சந்தித்து, இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதையும், மீனவர்களின் மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்வதையும் தடுத்திட ஒன்றிய அரசை தொடர்ந்து வலியுறுத்தி, இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனு அளித்தனர். இச்சந்திப்பின்போது, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், மாநில மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஜோசப் ஸ்டாலின், துணைச் செயலாளர் ரவிச்சந்திரன் ராமவன்னி ஆகியோர் உடனிருந்தனர்.

# திருச்சி - மதுரையில் டைடல் பூங்கா பணி!

## முதல்வர் தொடங்கி வைத்தார்... முதல் பக்கத் தொடர்ச்சி

ரூ.403 கோடி மதிப்பீட்டில் 5.58 லட்சம் சதுரஅடி பரப்பளவில் தரை மற்றும் ஆறு தளங்களுடன் IT, ITeS, BPOs, Startups போன்ற நிறுவனங்கள் இடம் பெறும் வகையில் புதிய டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.

**மதுரை மாவட்டத்தில் புதிய டைடல் பூங்கா!**

மேலும், மதுரை மாவட்டத்தில், மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணியில் 314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.34 லட்சம் சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் பன்னிரண்டு தளங்களுடன், IT, ITES, BPOs, Startups போன்ற நிறுவனங்கள் இடம் பெறும் வகையில் புதிய டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.

இப்பூங்காக்கள் சுமார் 12,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பு, குளிர்சாதன வசதிகள், 24X7 பாதுகாப்பு வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன. இதன் மூலம், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்கள் மற்றும் அவற்றின் சுற்றுப்புற மாவட்டங்களைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுவதுடன் அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்கே.என். நேரு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசின் செயல்பாடு மிகவும் திருப்தியாக உள்ளது !

## ஒன்றிய இணை அமைச்சர் பாராட்டு!

சிவகாசி, பிப்.20-

தமிழக அரசின் செயல்பாடு மிகவும் திருப்தியாக உள்ளது என ஒன்றிய இணை அமைச்சர் தெரிவித்தார். விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய கார்ப்பரேட் விவகாரம் மற்றும் சாலைப் போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை இணை அமைச்சர் ஹரிஷ் மல்கோத்ரா ஆய்வு செய்தார். அதிவீரன்பட்டி அங்கன்வாடி மையத்திற்குச் சென்றபோது, குழந்தைகள் தமிழில் வணக்கம் தெரிவிக்க பதிலுக்கு அவரும் தமிழில் வணக்கம் தெரிவித்தார். பின்னர் உணவு தயாரிக்கும் கூடத்தை பார்வையிட்டார். உணவின் தரத்தை அறிய சாப்பிட்டு ருசி பார்த்து ஆய்வு செய்தார்.

இதேபோல் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு செய்த ஒன்றிய இணை அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறுகையில், “அங்கன்வாடி மையங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசின் செயல்பாடு மிகவும் திருப்தியாக உள்ளது. தமிழக அரசு ஒன்றிய அரசின் ஜல்ஜீவன் குடிநீர் திட்டம், பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டம் என பல்வேறு திட்டங்களை சிறப்பாக அமல்படுத்தி உள்ளது. இதற்காக தமிழக அரசை பாராட்டுகிறேன். தமிழகத்தில் சுகாதார திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது” என்றார்.

மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட சாலையோர

# வியாபாரிகள் - அடையாள அட்டை பெறுவதற்கான முகாம்!

## மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தகவல்!

சென்னை, பிப். 20-

*பெருநகர சென்னை மாநகராட்சியில், சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் மேம்படுத்துதல் மற்றும் விற்பனையை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டம், திட்டம் மற்றும் விதிகளை பின்பற்றி நகர விற்பனைக்குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.*

*பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலையோர வியாபாரிகளின் விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்காக Chip பொருத்திய QR Code மற்றும் Weblink பயன்பாடுடன் கூடிய புதிய அடையாள அட்டை வழங்குவதற்கு நகர விற்பனை குழுவின் 24.01.2025 அன்று நடைபெற்ற 9வது கூட்டத்தில் சாலையோர வியாபாரிகளுக்கு வழங்கப்படாமல் உள்ள அடையாள அட்டைகளை பெறுவதற்கு 27.01.2025 முதல் 15.02.2025 வரை அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட வார்டு அலுவலகங்களில் வழங்க உத்தரவிடப்பட்டு, 13.02.2025 வரை 4,253 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, இதுவரை மொத்தம் 24,573 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6,567 அடையாள அட்டைகள் வழங்க கடைசி வாய்ப்பாக மீண்டும் 16.02.2025 முதல் 28.02.2025 வரை அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட வார்டு அலுவலகங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வியாபாரிகளுக்கான புதிய அடையாள அட்டைகள் வழங்கப்படும். மேலும், 28.02.2025க்குள் பெற்றுக் கொள்ளாத சாலையோர வியாபாரிகளின் அடையாள அட்டைகள் ரத்து செய்யப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.*

*எனவே, இந்த இறுதி வாய்ப்பினை சாலையோர வியாபாரிகள் பயன்படுத்தி பழைய அடையாள அட்டைகளை ஒப்படைத்து OTP வாயிலாக புதிய அடையாள அட்டைகளை அந்தந்த வார்டுகளில் 28.02.2025 வரை நடைபெறவுள்ள சிறப்பு முகாம்களில் அலுவலக வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

# மும்மொழிக் கொள்கை
## தாய்மொழியின் உயிரை உறிஞ்சிவிடும்!

**இந்தி என்ற மொழி
தன்னளவில் இயங்குவது
அதன் உரிமை**

**இன்னொரு
தேசிய இனத்தின்மீது
திணிக்கப்படும்போது
அது புல்லுருவிபோல்
உள்ளிருந்து
தாய்மொழியின்
உயிரை உறிஞ்சிவிடும்**

**இந்தியின்
ஆதிக்கம் அதிகமான
மராத்தி போன்ற மொழிகளுக்கு
நேர்ந்த கதி அதுதான்**

**தமிழுக்கும்
அது நேர்ந்துவிடக்கூடாது
என்றுதான்
மும்மொழிக் கொள்கையை
மும்முரமாய் எதிர்க்கிறோம்**

**மும்மொழிக் கொள்கையை
ஏற்றால்தான் நிதி தருவோம்
என்பது
விஷத்தைச் சாப்பிட்டால்தான்
சோறு போடுவோம்
என்பது போன்றது**

**ஏற்றுக்கொள்ள முடியாது**

**தமிழ்நாட்டு அரசின்
நிலைப்பாட்டோடு
தமிழர்கள் கெட்டியாக
ஒட்டி நிற்கிறார்கள்**

**அறிஞர் அண்ணாவும்
உடன் இருக்கிறார்**



கவிப்பேரரசு
**வைரமுத்து**